1981 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சிங்காரத் தோப்பிற்கும், சோனாங் குப்பத்திற்கும் இடையில் பாலம் அமைத்து அணுகுசாலை ஒன்றை அமைக்கும் திட்டத் திற்குத்தான் 34 இலட்சம் ரூபாய். ஏற்கனவே போடப்பட்ட திட்டத்தின்படி பாலத்திற்கு மட்டும் 13½ இலட்சம் ரூபாய். ஆகவேதான் இந்த மதிப்பீடு அதிகமாகியிருக்கிறது. மேலும் நான் வருகின்ற 1-ம் தேதி கடலூருக்குச் செல்லவிருக்கிறேன். அப்படிப் போகின்ற நேரத்தில் அந்தப் பகுதியையும் பார்வை யிடுவதாக இருக்கிறேன்.

கோட்டூர்புரம்—நந்தனம் இணைப்புப் பாலம்

வினா எண் 33—திரு து. புருடோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) சென்னை கோட்டூர்புரம்—நந்தனம் பகுதிகளை இணைக்கும் வகையில் ஒரு பாலம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) விரைவில் இப்பணி நிறைவேற்றப்படும்.

திரு. து. புருடோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பொழுது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலத்தைப் பற்றிய கேள்வி இது. அந்த ஆட்சி, இந்த ஆட்சி என்று ஆரம்பிக்காதீர் கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஏற்கனவே விளக்கம் கொடுத்து, அதை நான் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக் கிறேன். அடுத்த கேள்வியும் அதே முறையில் போகக் கூடாது.

திரு. துரைமுருகன் : ஆட்சி என்று சொன்னதை ஆட்சே பிக்க வில்லை. ** * என்று சொன்னதை நீக்க வேண்டு மென்று கேட்பது தப்பா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தப்பு என்று சொல்ல வில்லை. கோபப்படாமல், சாதாரணமாகவே கேட்கலாமே.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, இந்தக் கோட்டூர்புரம் நந்தனம் பகுதியை இணைக்கும் பாலத்தை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பொழுது, ஏறக்குறைய ரூ. 43 இலட்சம் ஒதுக்கீடு செய்து, அதைக் கட்ட வேண்டுமென்று திட்டம் இட்டார்கள். இடையிலே, அவசர நிலை வந்த காலத்திலே அது தவிர்க்கப்பட்டு, பிறகு அந்த அவசர நிலை காலத்திலேயே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இருந்தாலுங்கூட இன்றையதினம் வரையில் அது நிறைவேற்றப்பட வில்லை என்று தெரிய வருகிறது. இது ஒரு செல்வந்தருடைய தலையீட்டின் காரணமாக, இந்தப் பாலம் அங்கே கட்டப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே 1972-லே இந்தப் பணிக்காக ரூ. 26 லட்சம் மதிப்பீட்டுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே, 1974-லே அந்த ரூ. 26 இலட்சம் மதிப்பீடு ரூ. 44 இலட்சமாக உயர்த்தப் பட்டது. 1977 பிப்ரவரி திங்களில், மீண்டும் 4 வழிப் பாதையாக இல்லாமல், இரண்டு வழிப் பாதையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற காரணத்திற்காக, மீண்டும் திருத்திய மதிப்பீடுகள் ரூ. 39,20,000-க்குப் போடப்பட்டது. அந்தப் பாலத்தினுடைய முக்கிய நோக்கமே, அண்ணா சாலையிலே ஏற்படுகிற நெரிசலைத் தவிர்க்கவும், அதே நேரத்தில், பிரயாண நேரத்தைக் குறைக்கவும், எரிபொருள் செலவுகளைக் குறைக்கவும், ஆக இவற்றிக்குத்தான் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆக, திருத்திய மதிப்பீடுகளின் அடிப்படையிலே பால வேலைகள் துவங்கப்பட்டு, வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. டி. கே. கபாலி : தலைவர் அவர்களே, என்னுடைய 129-வது வட்டத்தில் திருவள்ளுவர் சிலையிலிருந்து முண்டகக் கன்னி அம்மன் கோயிலுக்குப் போகும் பாலம் இடிந்து விழும் தருவாயில் உள்ளது...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அனுமதி இல்லை. மூலக் கேள்வி கோட்டூர்புரம் பற்றியது.

சங்கனூர், கணபதி பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள்

*வினா எண் 34—திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ள சங்கனூர், கணபதி பஞ்சாயத்துப் பகுதிகளில் அடிப்படை சுகாதார, சாலை, சாக்கடை வசதிகளை ஏற்படுத்த அரசு விசேஷத் திட்டம் ஏதேனும் செயல் படுத்துகிறதா?